7

Register No. 

# இரண்டாம் பருவத்தேர்வு–2024

நேரம் : 2.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

## பகுதி - I, பிரிவு - 1

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 10x1=10

1. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன ..........
அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள்
2. இன்று+ஆகி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ........
அ) இன்று ஆகி ஆ) இன்றி ஆகி
இ) இன்றாகி ஈ)இன்றா ஆகி
3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ........
அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு
4. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் .............
அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ)திசைச்சொல் ஈ) வடசொல்
5. இவை+ எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
அ) இவை எல்லாம் ஆ) இவையெல்லாம்
இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்
6. பெயர்ப் பகுபதம் ........... வகைப்படும்.
அ) நான்கு ஆ) ஐந்து இ)ஆறு ஈ) ஏழு
7. மயிலும் மானும் வனத்திற்கு ......... தருகின்றன.
அ) களைப்பு ஆ)வனப்பு இ)மலைப்பு ஈ) உழைப்பு
8. ‘வண்கீரை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............
அ) வண்+ கீரை ஆ) வண்ணம் +கீரை
இ) வளம்+கீரை ஈ) வண்மை + கீரை
9. ‘செப்பேடு’ என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது ...........
அ)செப்பு+ஈடு ஆ) செப்பு+ஒடு இ) செப்பு+ஏடு ஈ) செப்பு+யேடு
10. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் ............... இருக்கக் கூடாது.
அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

## பிரிவு - 2

பொருத்துக 4x1=4

11. கழனி - கப்பலைச் செலுத்துபவர்
12. பரிதி - அடிமரம்
13. ஏரா - கதிரவன்
14. மீகாமன் - வயல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - II

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க** 5x2=10

15. மரக்கலங்களைத் துறை முகம் நோக்கி அழைப்பது எது?
16. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக
17. மண், பொன் என்பன எவ்வகைச் சொற்கள்.
18. பாரதி தாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
19. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
20. பதத்தின் இரு வகைகள் யாவை?
21. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
22. ஓவியங்களின் வகைகள் யாவை ?

## பகுதி - III

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க** 3x3=9

23. கேலிச்சித்திரம் என்றால் என்ன?
24. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?
25. விகுதி எவற்றைக் காட்டும்?
26. கல்வியே அழியாத செல்வம் என்பதை விளக்குக
27. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.

## பகுதி - IV

**மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக** 3+2=5

28. கட்டி அடிக்கையால் எனத்தொடங்கும் கீரைப் பாத்தியும் குதிரையும் பாடலை எழுதுக.
29. எண்ணித் ... எனத் தொடங்கும் திருக்குறள்.

## பகுதி - V

**எவையேனும் மூன்றிற்கு மட்டும் விடையளிக்க** 3x2=6

30. கலைச் சொல் அறிவோம் : அ) Brush ஆ) Degree
31. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக
    அ) ........ சுடும் ஆ) ........... மணம் வீசும்
32. பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.
    அ) கண்மணி நாளை பாடம் படித்தாள்.
    ஆ) ஆசிரியர் நாளை சிறுதேர்வு நடத்தினார்.
33. இரு பொருள் தருமாறு தொடரில் அமைக்க : அ) ஆறு, ஆ) மாலை

## பகுதி - VI

**விரிவாக விடையளிக்க** 2x8=16

34. அ) 'ஆழ் கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக

(அல்லது)

ஆ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

35. அ) கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக: எங்கள் ஊர் (முன்னுரை-அமைவிடம், பெயர்க்காரணம் - தொழில்கள்- சிறப்பு மிகு இடங்கள் - திருவிழாக்கள் - மக்கள் ஒற்றுமை. முடிவுரை) (அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com